

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனையோட்டம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர். தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை துணைச்செயலாளர் மு.பிரதாப் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாணவர்களுக்கு தாங்கும் திறன் பரிசோதனை

## பள்ளி தலைமை ஆசிரியர் உள்பட அனைவர் மீதும் உரிய நடவடிக்கை!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உறுதி!

சென்னை,டிச. 8-

தமிழகத்தில் உள்ள அனைத்து நூலகங்களில் பணியாற்றும் நூலகர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுவதை அடுத்து, சென்னையில் பயிற்சியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இரண்டு நாட்கள் பயிற்சி நடக்கிறது. இதில் 850 நூலகர்கள் பங்கேற்கின்றனர். இந்த பயிற்சியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் அளித்த பேட்டி:

சென்னையில் ஐ.ஐ.டி. வளாகத்தில் உள்ள பள்ளி ஒன்றில் மாணவ, மாணவியரை ஓட விட்டு மருத்துவ சோதனை (தாங்கும் திறன்) செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. அதுபோன்ற முறை தவறானது. மாணவர்களை சோதனை செய்வது என்பது ஒன்றும் தனியாக இல்லை.

பள்ளிக் கல்வித்துறையில் பொதுவாக உடல்நலம் குறித்து அறிந்து கொள்ளச் செய்வது போன்றவை செய்யப்படும். எதற்காக ஓட விட்டு சோதித்துள்ளனர் என்பது தெரியவில்லை. என்ன எண்ணத்தில் இதை செய்துள்ளனர் என்பது தெரியவில்லை. இதுகுறித்து அந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர். இருப்பினும் மருத்துவர்கள் மூலம் எங்களுக்கு வரக்கூடிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்டு அதற்கான முடிவு எடுக்கப்படும். யாராக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். 3 மாவட்டங்களில் மழை பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக விழுப்புரம் மாவட்டத்தில் 279 பள்ளிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

200 பள்ளிகளில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு நாட்களில் மாணவர்களுக்கு புத்தகங்கள், நோட்டுகள் வழங்கப்படும். டிசம்பர் 2ம் தேதியில் இருந்து அரையாண்டு செய்முறைத் தேர்வு நடக்க வேண்டியது. 15ம் தேதிக்குள் இயல்பு நிலை திரும்பினால் உடனடியாக தேர்வு நடத்தலாம் என்றும், பாதிப்பு அதிகம் உள்ள பள்ளிகளில் அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் முடிவு எடுத்து நடத்தவும் தெரிவித்துள்ளோம். இவ்வாறு அன்பில் மகேஸ் பேட்டியில் தெரிவித்தார்.

### வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்டத் திட்டம்:

# விருதம்பட்டு சர்க்கார்தோப்பு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனை ஓட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

**வேலூர், டிச.8-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்தி கரிப்பு நிலையத்தில் சோதனையோட்டம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

அதன் விரபம் வருமாறு :

வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பகுதி1 TNUDPIII 20082015 திட்டத்தின்கீழ் ரூ.40.49 கோடி மதிப்பீட்டில் 48.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைத்து 10.28MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இரண்டாம் கட்டமாக AMRUT 201617 திட்டத்தின்கீழ் ரூ.690.91 கோடி மதிப்பீட்டில் 4 சிப்பங்களாக பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு TNUIFSL நிறுவனத்தின் மூலமாக ஆசிய உலக வங்கி (ADB) நிதியுதவியுடன் 421 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் அமைக்கவும் 50.00 MLD(STP) கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 7.10.2019 அன்று பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

முதலமைச்சர் 3.02.2023 நடைபெற்ற ஆய்வின் போது இப்பணிகளை துரிதமாக முடிக்க அறிவுறுத்தியதன் அடிப்படையில் பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. தற்போது 401கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டு சோதனையோட்டம் நடைபெற்று வருகின்றது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) பாதாள சாக்கடை திட்டம் குறித்தும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனையோட்ட பணிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அலுவலர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை துணைச் செயலாளர் மு.பிரதாப் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசின் திட்டங்கள் மக்களைச் சென்று சேருவதை அரசு அலுவலர்கள் உறுதிப்படுத்த வேண்டும்!

# அனைத்துத் துறை அலுவலர்களும் - பொதுமக்களின் மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## வேலூர் – இராணிப்பேட்டை மாவட்டங்களின் – அரசுப் பணிகள் ஆய்வுக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**வேலூர், டிச. 8-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தின்போது, பொது மக்களுக்காக சிறப்பாக சேவையாற்றிய அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து அரசு துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 6.12.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர் திட்டம், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், குடிநீர் திட்டப் பணிகள், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் -நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞர் கனவு இல்லத் திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து திடீராய்வு மேற்கொண்டு, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களைச் சேர்ந்த மனுதாரர்களிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களது கோரிக்கை விவரங்கள் குறித்து கேட்டறிந்ததுடன், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடன் நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழகம் முழுவதும் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறதா என்பதை தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறோம். இதற்காகத்தான் ‘முதமைச்சரின் முகவரி’ என்ற தனித்துறையையே முதலமைச்சர் அவர்கள் உருவாக்கினார்கள். இன்றைய தினம் மனுதாரர்களிடம் அலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டது போன்று தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே அனைத்துத் துறை அலுவலர்களும் தங்களுக்கு வரும் மனுக்கள் மீது உரிய விசாரணைகள் மேற்கொண்டு, விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் மக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில்தான் திட்டங்களைத் தீட்டுகிறோம். அவை முறையாக பொதுமக்களுக்குச் சென்று சேர்வது அலுவலர்களின் கைகளில்தான் இருக்கிறது. அதை நீங்கள்தான் உறுதிப்படுத்த வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அலுவலர்கள் வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் மக்களுக்கு அரசுத்திட்டங்களின் கீழ் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிய அலுவலர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டதற்காக வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தைப் பாராட்டி வட்டாட்சியர் தே.முரளிதரன் அவர்களுக்கும், சிறப்பாக மருத்துவ சேவை வழங்கிய திருவலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக மருத்துவ நல அலுவலர் திருமதி. எம்.ராணி அவர்களுக்கும், அணைக்கட்டு வட்டத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக ஆசனாம்பட்டு அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் டி.சரவணன் அவர்களுக்கும் நற்சான்றிதழ் மற்றும் கேடயங்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் அதிக தேர்ச்சி விகிதத்தை அளித்த அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மின்னல் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியை பாராட்டி தலைமையாசிரியர் திருமதி.வ.கு.சாரதா அவர்களுக்கும், சிறப்பாக மருத்துவ சேவை வழங்கிய கொடைக்கல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக மருத்துவ நல அலுவலர் கு.கோபிநாத் அவர்களுக்கும், சிறப்பாக சேவை வழங்கிய சுமைதாங்கி நகர கூட்டுறவு கடன் சங்கத்தை பாராட்டி செயலாளர் கண்ணன், தனி அலுவலர் தயாளன் ஆகியோருக்கும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணியாற்றியதற்காக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் பூ.சரவணகுமார் ஆகியோருக்கும் துணை முதலமைச்சர் அவர்கள் நற்சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், ஜெ.எல்.ஈஸ்வரப்பன், அ.செ.வில்வநாதன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் மு.பாபு, துணை மேயர் மா.சுனில் குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, (வேலூர்), முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, (ராணிப்பேட்டை), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை துணைச் செயலாளர் மு.பிரதாப் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழக துணை முதல்வர் – மாநில இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர, இளைஞர் அணியின் சார்பாக 47/3 மூன்றாவது நிகழ்வாக கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவில் மாவட்ட செயலாளரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி பொற்கிழிகளை வழங்கி சிறப்பித்தார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் முத்து தீபக் ஆகியோர் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் திருச்சி மாநகரச் செயலாளர்– மண்டலக் குழு தலைவர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், மாவட்ட மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாலமுருகன் ரவீந்திரன், தேசிங்கு ராஜா, பெர்னாடிசாமிநாதன், விஷ்ணுவரதன், சையத் சாகிப், அல்லாஹ் பிச்சை, ரஞ்சித்,கண்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சரத்குமார் நன்றி கூறினார்.